முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் II பரீட்சை – 2025 யூலை

(201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2025-07-26
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    விடையெழுத : 03 மணித்தியாலங்கள்
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

பக்கங்கள் : 10
வினாக்கள் : 07

பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

1.1 **வரையறுக்கப்பட்ட ஸாரா கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் ரூ. 65,000,000/- கிரயத்தில் மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. மோட்டார் வாகனத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகள் என்பதுடன் பயன்தரும் ஆயுட்கால முடிவில் மதிப்பிடப்பட்ட ஈற்றுப் பெறுமதி (residual value) ரூ. 5,000,000/- ஆகும். கம்பனி அதன் மோட்டார் வாகனங்களை கிரயத்தில், நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்கிறது. 2025 மார்ச் 31 இல் மோட்டார் வாகனத்தின் முன்கொணரற் பெறுமதி :

(1) ரூ. 32,500,000/-. (2) ரூ. 35,000,000/-.

(3) ரூ. 30,000,000/-. (4) ரூ. 41,000,000/-. (02 புள்ளிகள்)

1.2 பின்வருவனவற்றில் ஒரு கிரய அலகிற்கான உதாரணமாக அமைவது எது?

(1) வெதுப்பகம் (2) சிற்றுண்டிச்சாலை (3) ஹோட்டல் (4) பாண்

(02 புள்ளிகள்)

1.3 கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்தில் கொள்க :

(a) முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) முறையும் எடையேற்றிய சராசரி முறையும் தொக்குகளை மதிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றன.

(b) கிரயம் அல்லது நிகர தேறுகைப் பெறுமதியில் எது குறைந்ததோ அதில் தொக்குகள் மதிப்பிடப்படுகின்றன.

(c) அலுவலகப் பாவனைக்காக வைத்திருக்கப்படும் அலுவலக உபகரணம் தொக்காகக் கருதப்படுகிறது.

LKAS 02 – தொக்குகள் என்ற நியமத்தின்படி, மேலுள்ளவற்றிலிருந்து சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.
(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

1.4 கீழ்வரும் தகவல்கள் 2025 யூன் மாதத்திற்கான ***வரையறுக்கப்பட்ட சன்*** கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

மாதத்திற்கான உண்மையான மேந்தலைக் கிரயம்	ரூ. 840,000/-
மாதத்திற்கான பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம்	ரூ. 800,000/-
மாதத்திற்கான பாதிடப்பட்ட நேர் கூலி மணித்தியாலங்கள்	25,000 மணித்தியாலங்கள்
மாதத்திற்கான உண்மையான நேர் கூலி மணித்தியாலங்கள்	28,000 மணித்தியாலங்கள்

மாதத்திற்கான குறைவான / மேலதிக உறிஞ்சல் மேந்தலைக் கிரயமானது :

(1) ரூ. 56,000/- மேலதிக உறிஞ்சல்
(2) Rs.56,000/- குறைவான உறிஞ்சல்.
(3) ரூ. 100,800/- மேலதிக உறிஞ்சல்
(4) Rs.100,800/- குறைவான உறிஞ்சல். (02 புள்ளிகள்)

1.5 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கு ஏற்ப, பின்வருவனவற்றில் எது சரியானது?

(1) பங்காளர்களால் வழங்கப்படும் கடன்கள் மீதான வட்டிக்கு பங்காளர்கள் உரித்துடையவர்கள் அல்லர்.

(2) பங்காளர்கள் சமமான மாதாந்தச் சம்பளத்தைப் பெற உரித்துடையவர்கள்.

(3) பங்காளர்கள் இலாப / நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கு உரித்துடையவர்கள்.

(4) பங்குடமைக்கு ஒரு புதிய பங்காளரை இணைத்துக் கொள்ளும்போது ஏற்கனவேயுள்ள அனைத்துப் பங்காளர்களினதும் சம்மதம் அவசியமில்லை. (02 புள்ளிகள்)

1.6 தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

1.6 நிதிக் கூற்றுக்களின் மூன்று (03) கூறுகளைக் (elements) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

1.7 நிதிக் கணக்கீட்டிற்கும் கிரயக் கணக்கீட்டிற்குமிடையேயான மூன்று (03) வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

1.8 கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட அஸீன் கம்பனியின் பணி இல. 5000** தொடர்பான பிரித்தெடுப்பாகும் :

நேர் மூலப்பொருள்	:	1,200 கிலோகிராம் - ஒரு கிலோகிராம் ரூ.150/- விலையில்
நேர் கூலி	:	400 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூ.500/-
உற்பத்தி மேந்தலைகள்	:	நேர் கூலிக் கிரயத்தில் 75%

கம்பனி, விற்பனை விலை மீது 15% இலாபத்தைப் பேணுகிறது.

பணி 5000 மீது விதிக்கப்பட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

1.9 கீழ்வரும் தகவல்கள் 2025 மார்ச் மாதத்திற்கான **World-Wide (Pvt) Ltd.** இன் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

	ரூ.
அடிப்படைச் சம்பளம்	9,420,000
மேலதிக நேரக் கொடுப்பனவு	1,100,000
ஊழியர் நலன்புரிப் பங்களிப்புக்கான கழிப்பனவுகள்	15,000
முற்பண வருமான வரிக் கொடுப்பனவு (APIT) மீதான கழிப்பனவுகள்	520,000

கம்பனியானது ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தில் 12% இற்குச் சமமான தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), 3% இற்குச் சமமான தொகையை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) செலுத்துகிறது. EPF இற்கான ஊழியரின் பங்களிப்பு 8% ஆகும்.

2025 மார்ச் மாதத்திற்காக **World-Wide (Pvt) Ltd.** இனால் செலுத்தப்படும் நிகரச் சம்பளத்தைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

1.10 **A, B** ஆகிய இருவரும் இலாப, நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிரும் **'இளம் பங்காளிகள்'** என்ற பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். **C** என்பவர் 2024 ஏப்ரல் 01 இல் ஒரு புதிய பங்காளராக இணைந்து கொண்ட பின்னர், பங்காளர்களுக்கிடையே இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

A, B ஆகியோரின் அர்ப்பணிப்பு விகிதத்தைக் (sacrificing ratio) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 02

ஜனத் என்பவர் ரூ. 5,000,000/- ஐக் காசாக முதலீடு செய்து, 2023 சனவரி 01 இல் **'ஜனத் கெயார்'** என்ற பெயரில் ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தார். இது, இந்தியாவிலிருந்து தோல் பராமரிப்புப் பொருள்களை இறக்குமதி செய்து, விற்பனைப் பிரதிநிதிகள் ஊடாக மேல் மாகாணம் முழுவதும் விநியோகிக்கின்ற வியாபாரமாகும்.

ஜனத் கெயாரின் ஏனைய சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் கீழ்வருமாறு : *(ரூ.'000)*

இல்	**2024 டிசெம்பர் 31**	**2024 சனவரி 01**
மோட்டார் வாகனங்கள் - முன்கொணரற் பெறுமதியில்	20,000	22,500
தளபாடமும் பொருத்துக்களும் - முன்கொணரற் பெறுமதியில்	2,300	2,800
தொக்குகள்	3,488	2,678
வியாபாரக் கடன்பட்டோர்	4,895	3,475
காசு மற்றும் வங்கி மீதிகள்	?	12,858
அட்டுறு மின்சாரம் மற்றும் நீர்	62	54

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) இவ்வியாபாரமானது ஒரு வாடகைக் கட்டடத்தில் இயங்குவதுடன், இக்கட்டடத்திற்காக 2024 சனவரி 01 இல் ஒரு வாடகை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. மாதாந்த வாடகை ரூ. 60,000/-. ஆண்டிற்கான வாடகையும் 6 மாத மீளளிக்கத்தக்க முற்பணமும் (key money) 2024 சனவரி 01 இல் கட்டட உரிமையாளருக்குச் செலுத்தப்பட்டது.

(2) ஆண்டின் காலப்பகுதியில் எவ்விதமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவோ அல்லது விற்பனை செய்யப்படவோ இல்லை.

(3) ஆண்டின் காலப்பகுதியில் கடனுக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளின் பெறுமதி ரூ.28,200,000/ ஆகும். இது மொத்த விற்பனையில் 75% ஆக இருந்தது. வியாபாரத்தின் மொத்த இலாப எல்லை விற்பனையின் 40% ஆக இருந்ததுடன் அனைத்துக் கொள்வனவுகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(4) **ஜனத்** 2023 சனவரி 01 இலிருந்து 5 விற்பனைப் பிரதிநிதிகளைப் பணியமர்த்தியிருந்ததுடன், அவர்களுக்கு விற்பனைத் தரகிற்கு (sales commission) மேலதிகமாக ஒவ்வொருவருக்கும் ரூ. 145,000/- சம்பளம் வழங்கப்படுகிறது. விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விற்பனை தரகு ஆனது மொத்த விற்பனையில் 2% ஆகச் செலுத்தப்படுகிறது. வியாபாரத்தின் நிருவாக உத்தியோகத்தர் 2024 சனவரி 01 முதல் ரூ. 50,000/- மாதாந்தச் சம்பளம் பெற உரித்துடையவர். விற்பனைத் தரகும் சம்பளங்களும் ஒவ்வொரு மாத இறுதியிலும் செலுத்தப்படுகிறது.

(5) ஆண்டிற்கான மின்சாரம் மற்றும் நீர்ச் செலவுகள் ரூ. 672,000/-.

(6) 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வேறு எந்தச் செலவினங்களோ அல்லது வருமானங்களோ இல்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக.** :

(a) 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் (07 புள்ளிகள்)

(b) 2024 டிசெம்பர் 31 இலான மூலதன (உரிமையாண்மை) மீதி (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

லசித், நிசித், சுமித் ஆகியோர் சமீபத்தில் தங்களது தொழில்சார் கல்வியை நிறைவு செய்திருந்தனர். அவர்கள் 2024 சனவரி 01 இல், இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு, **"LNS Associates"** என்ற பெயரில் ஒரு பங்குடமை வணிகத்தை ஆரம்பித்தனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றை வழங்குகிறது :

- பங்காளர்கள் மாதாந்தச் சம்பளம் ரூ. 20,000/- பெற உரித்துடையவர்கள்.
- ஆரம்ப மூலதன முதலீடுகள் மீது பங்காளர்கள் ஆண்டிற்கு 5% வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.

(2) வணிகமானது **சுமித்தின்** வளாகத்தில் அமைந்துள்ளதால், அவர் ரூ. 25,000/- மாதாந்த வாடகையை பெற உரித்துடையவர். ஆண்டிற்கான வாடகை செலுத்தப்படாததுடன் அது கணக்கிலும் கொள்ளப்படவில்லை.

(3) 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூ.11,901,000/-.

(4) கீழ்வரும் மீதிகள் பங்குடமையின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(ரூ.'000)

	வரவு	செலவு
2024 சனவரி 01 இல் மூலதனக் கணக்குகள்:		
லசித்		1,500
நிசித்		1,500
சுமித்		1,800
2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியிலான எடுப்பனவுகள் :		
லசித்	300	
நிசித்	200	

(5) 2024 டிசெம்பர் 31 இல், **சுமித்** பங்குடமையிலிருந்து விலகத் தீர்மானித்ததுடன் **லசித்தும் நிசித்தும்** பங்குடமையை அதே பெயரில் தொடர்ந்தும் நடத்திச் செல்லவும் இலாப, நட்டங்களை முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டனர்.

(6) பங்குடமையின் நன்மதிப்பு 2024 டிசெம்பர் 31 இல் ரூ. 2,400,000/- ஆக மதிப்பிடப்பட்டதுடன், இது நன்மதிப்புக் கணக்கைக் காட்டாது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **LNS Associates** இன் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ள தொழில்சார் அழகுக்கலை நிபுணர்கள் 2022 சனவரி 01 இல் அங்கத்தவர்கள் நலச் சங்கம் என்ற ஒன்றை உருவாக்கினார்கள். இதன் நோக்கம் தொழில்துறை நியமங்களை மேம்படுத்துவதும் சலூன் தொழில்சார் வல்லுநர்களுக்கான பயிற்சி மற்றும் ஆதரவுகளை வழங்குவதுமாகும்.

2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2024 சனவரி 01 இல் அங்கத்தவர்கள் விபரம் பின்வருமாறு :

நிலுவையாகவுள்ள அங்கத்துவக் கட்டணங்கள்	5 அங்கத்தவர்கள்
முற்பணமாகச் செலுத்திய அங்கத்துவக் கட்டணங்கள்	8 அங்கத்தவர்கள்
அங்கத்தவர் எண்ணிக்கை	105 அங்கத்தவர்கள்

(2) அங்கத்தவர் ஒருவருக்கான அங்கத்துவக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ. 15,000/-. ஆண்டின் காலப்பகுதியில், 5 புதிய அங்கத்தவர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களைச் செலுத்தி சங்கத்தில் இணைந்து கொண்டனர்.

(3) 2024 டிசெம்பர் 31 இல், முன்செலுத்திய அங்கத்துவக் கட்டணங்கள் எதுவும் இல்லை என்பதுடன் 8 அங்கத்தவர்களின் அங்கத்துவக் கட்டணங்கள் செலுத்தப்படாது நிலுவையாகக் காணப்பட்டன.

(4) சங்க அங்கத்தவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சங்கம் ரூ. 1,500,000/- நன்கொடை ஒன்றைப் பெற்றுள்ளது. அதற்கிணங்க, பெறப்பட்ட நன்கொடையின் முழுத் தொகையையும் பயன்படுத்தி ஒரு பயிற்சி அளிக்கப்பட்டது.

(5) அங்கத்துவச் செயல்பாடுகளின் விரிவாக்கத்துடன் 2024 யூலை 01 இல் ஒரு செயலாளர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார். செயலாளர் மாதாந்தம் ரூ. 30,000/- சம்பளம் பெற உரித்துடையவர். செயலாளரின் பாவனைக்காக அதே நாளில் ரூ. 300,000/- பெறுமதியான ஒரு மடிக்கணினியும் கொள்வனவு செய்யப்பட்டது. அதனை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் 5 ஆண்டுகள் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக தேய்மானஞ் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(6) அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு 2024 டிசெம்பர் 15 இல் நடைபெற்றது. சங்கத்தின் 90 அங்கத்தவர்கள், அங்கத்தவர் ஒருவருக்கு ரூ.18,000/- என்ற அனுமதிக் கட்டணத்தைச் செலுத்திப் பங்குபற்றியிருந்தனர்.

(7) கீழ்வரும் செலவினங்கள் செய்யப்பட்டுள்ளன :

செலவினம்	சங்க நடவடிக்கைகள் (ஒன்றுகூடல் தவிர்ந்த ஏனையவை) (ரூ.)	ஒன்றுகூடல் நடவடிக்கைகள் (ரூ.)
காகிதாதிகள்	55,000	25,000
தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்கள்	* 60,000	-
பயணச் செலவினங்கள்	45,000	15,000
வாடகைச் செலவினங்கள்	360,000	240,000
இசை வாத்தியங்களும் அறிவிப்புகளும்	-	60,000
அங்கத்தவர்களுக்கான அன்பளிப்புகள்	-	500,000

* இது 2023 டிசெம்பர் மாதக் கட்டணப் பட்டியலுக்காகச் செலுத்திய ரூ.5,000/- ஐ உள்ளடக்கியுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

சங்கத்தின் 2024 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு (03 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

(A) **Victor (Pvt) Ltd.** இன் ஓர் ஊழியரது 2025 யூன் மாத முதலாவது வாரத்திற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

வாரமொன்றுக்கான சாதாரண வேலை மணித்தியாலங்கள்	நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் என்பதுடன் ஒரு வாரத்தில் 5 வேலை நாட்கள் உள்ளன.
மணித்தியாலமொன்றுக்கான அடிப்படை கூலி வீதம்	ரூ. 450/-
ஓர் அலகை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள நியம நேரம்	10 நிமிடங்கள்
மிகையூதியம்	அடிப்படைக் கூலி வீதத்தில் சேமிக்கப்பட்ட நேரத்தின் 125%.
முதலாவது வாரத்தில் ஊழியரால் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை	360 அலகுகள்

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 யூன் மாத முதலாவது வாரத்திற்கான ஊழியரின் மொத்தச் சம்பாத்தியத்தைக் (total earnings) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(B) **ABC Ltd.** இன் **பொருள் Z** தொடர்பான பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

வருடாந்தக் கேள்வி	8,000 அலகுகள்
அலகொன்றின் கொள்வனவு விலை	ரூ. 30,000/-
கட்டளையிடற் கிரயம்	கட்டளை ஒன்றுக்கு ரூ. 300,000/-
கட்டளைக் காலம் (Lead Time)	2 - 3 மாதங்கள்
அலகொன்றின் வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம்	கொள்வனவு விலையில் 25%
பயன்பாடு	200 - 400 அலகுகள்

நீங்கள் செய்ய வேண்டியவை :

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) (02 புள்ளிகள்)

(b) மறு - கட்டளை மட்டம் (02 புள்ளிகள்)

(c) குறைந்தபட்ச இருப்பு மட்டம் (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 06

வரையறுக்கப்பட்ட X (தனியார்) கம்பனி பொருள் Y ஐ உற்பத்தி செய்கிறது. இது இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் **(A, B)** ஒரு சேவைப் பிரிவையும் **(C)** கொண்டுள்ளது.

(1) கம்பனி 2025 ஆகஸ்ட் மாதத்திற்கான பின்வரும் உற்பத்தி மேந்தலைகளை மதிப்பிட்டுள்ளது :

கிரய உருப்படி	**கிரயம் (ரூ.)**
இயந்திரத் தேய்மானம்	1,800,000
தொழிற்சாலை வாடகை	720,000
மின்சாரம்	1,200,000
தரக் கட்டுப்பாட்டுச் செலவினங்கள்	400,000

(2) உங்களுக்குக் கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

	உற்பத்திப் பிரிவு		**சேவைப் பிரிவு**
	பிரிவு A	**பிரிவு B**	**பிரிவு C**
நேரில் பொருள் கிரயம் (ரூ.)	450,000	280,000	175,000
இயந்திரப் பெறுமதி (ரூ.)	15,000,000	18,000,000	7,000,000
மின்சாரப் பாவனை (கிலோவாற்று)	1,200	800	400
தரைப் பரப்பு (சதுர அடி)	1,600	1,400	600
தரப் பரிசோதனைகளின் எண்ணிக்கை	24	36	40
நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை	10,000	16,000	-
கிரயப் பகிர்வு – **பிரிவு C**	45%	55%	-
ஓர் உற்பத்திப் பொருளுக்குத் தேவையான நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை	1	2	-

(3) ஓர் உற்பத்திப் பொருளுக்காக மதிப்பிடப்பட்ட நேர் கிரயங்கள் பின்வருமாறு :

ஓர் உற்பத்திப் பொருளுக்கு	**ரூ.**
நேர் பொருள்	300
நேர் கூலி	220
முதன்மைக் கிரயம்	**520**

நீங்கள் செய்ய வேண்டியவை:

(a) மேந்தலைகள் எவ்வாறு ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) உற்பத்திப் பொருளொன்றின் மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 07

2025 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட பவர் ஹப் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி பின்வருமாறு:

(ரூ.)

	வரவு	செலவு
குறிப்பிடு மூலதனம் (1,200,000 சாதாரண பங்குகள்) – 2024 ஏப்ரல் 01 இல்		12,000,000
கைக்கொள் இலாபம் – 2024 ஏப்ரல் 01 இல்		12,550,000
விண்ணப்பமும் ஒதுக்கீட்டுக் கணக்கும் - உரிமை வழங்கல்		2,400,000
இயந்திர விற்பனை		2,800,000
பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :		
இயந்திரம்	8,000,000	
மோட்டார் வாகனங்கள்	9,500,000	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :		
இயந்திரம்		1,600,000
மோட்டார் வாகனங்கள்		4,750,000
2025 மார்ச் 31 இல் தொக்கு	9,425,300	
வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள்	21,519,500	6,899,700
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	7,593,825	
2024 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை		645,000
செலுத்திய இடைக்காலப் பங்கிலாபங்கள்	3,000,000	
விற்பனைகள்		63,352,500
விற்பனைக் கிரயம்	34,843,875	
விளம்பரப்படுத்தல் செலவினங்கள்	3,600,000	
விற்பனைத் தரகு (பணிசை)	1,800,000	
பயணங்களும் போக்குவரத்தும்	1,074,700	
சம்பளங்களும் கூலிகளும்	2,500,000	
அச்சிடுதலும் காகிதாதிகளும்	209,800	
மின்சாரம்	1,150,000	
அலுவலக வாடகை	300,000	
வங்கிக் கட்டணங்கள்	80,200	
செலுத்திய வருமான வரி	2,400,000	
	106,997,200	**106,997,200**

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூ. 9,200,000/-.

(2) 2022 ஏப்ரல் 01 இல் ரூ. 3,300,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஓர் இயந்திரம் 2024 அக்டோபர் 01 இல் ரூ. 2,800,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், 2024 அக்டோபர் 01 இல் ரூ. 3,000,000/- இற்கு ஒரு புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு அது அத்தினமே நிறுவப்பட்டது. இயந்திர விற்பனை மூலமான விற்பனை இலாபம் இயந்திர விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளை, புதிய இயந்திரத்தின் கிரயம் இயந்திரக் கணக்கில் பதிவு செய்யப்பட்டது. இவை தவிர வேறெந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

(3) பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் பொறி மற்றும் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் பின்வருமாறு :

இயந்திரம்	10 ஆண்டுகள்
மோட்டார் வாகனங்கள்	4 ஆண்டுகள்

(4) 2025 மார்ச் 31 இல் கணக்கேடுகளில் பின்வரும் முற்கொடுப்பனவுகளும் அட்டுறுக்களும் கணக்கிற் கொள்ளப்படவில்லை :

	ரூ.
முன்செலுத்திய வாடகை	60,000
செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம்	370,000

(5) வரிமதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 2,465,000/- என்பதுடன் அந்தத் தொகையில் ரூ. 2,400,000/- ஆனது ஆண்டின் காலப்பகுதியில் காலாண்டுத் தவணைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டது.

(6) 2025 சனவரி 31 இல், கம்பனி, இருக்கின்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் உரிமை வழங்கலை செய்ததுடன், பங்கொன்று ரூ. 10/- விலையில், 2024 ஏப்ரல் 01 இல் வைத்திருக்கப்பட்ட ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் ஒரு பங்கு வீதம் வழங்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற காசு காசுக் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்பட்டதுடன் விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு – உரிமை வழங்கல் இற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டது. அவை தவிர இது தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

(7) கம்பனியானது 2024 செப்ரெம்பர் 30 இல் அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றுக்கு ரூ. 2.50 என்ற அடிப்படையில் இடைக்காலப் பங்கிலாபமொன்றைச் செலுத்தியது.

(8) 2025 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீது 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேண பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(9) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2025 மே 30 இல் பணிப்பாளர் சபை அதிகாரமளித்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட பவர் ஹப் (தனியார்) கம்பனியின்** பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (13 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	வரைக (Draw)	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	ஏற்பிசைவு செய்க (Recognize)	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	தொடர்பாடுக(Communicate)	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்